# D E P O S I T I O N  O F  W I T N E S S

--------

## IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM

## MCOP.33/2019

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகேசன் | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**21.08.2025.**

**ம.சா. 2 : முருகேசன்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரூர் மாவட்டம் வேலாயுதபாளையம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலர் 1401 பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வேலாயுதபாளையம் காவல்நிலையத்திற்கு அழைப்பானை கிடைக்கப்பெற்றது. மேற்படி வழக்கில் சாட்சியமளிப்பதற்காக, காவல் ஆய்வாளர் எனக்கு அனுமதி அளித்துள்ளார். வேலாயுதபாளையம் காவல் நிலைய குற்ற எண்.470/2016 வழக்கின் நாட்குறிப்பேட்டை நான் உடன் எடுத்து வந்துள்ளேன். மேற்படி குற்ற எண்.470/2016 முதல் தகவல் அறிக்கையின்படி TN 63 Y 3242 ஆம்மினி பஸ் ஓட்டுநர் முருகேசன் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் முருகேசன் என்பவர் விபத்து சமயத்தில் ஓட்டிச்சென்ற வாகனம் TN 63 V 3242 ஆகும். மேற்படி வாகனத்தை வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தார் மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டி ஒப்படைத்துள்ளோம். TN 63 V 3242 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்து சமயத்தின்போது முருகேசன் ஓட்டிச்சென்ற வாகனம் TN 63 V 3242 வாகனம் ஆகும். ஆனாம் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தபோது தட்டச்சு பிழையின் காரணமாக காலம் எண்.7லிலும், காலம் எண்.12லும் TN 63 Y 3242 என்பதாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட நக்கீரன் என்பவரை S.S.ஆம்புலன்ஸ் TN

38 A 6796ன் ஓட்டுநர் மணி என்பவர் மருத்துவமனையில் அனுமதித்தாக AR பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி A.R Copy உண்மை நகல் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரான போதிலும், குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என கூறப்பட்டது.

"Taken down by me/before me in open Court, interpreted / read over to the witness and admitted by the deponent to be correct"

Subordinate Judge,
Gobichettipalayam.